Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

ஸ்ரீ சிதம்பரம்

# நடராஜமூர்த்தி நாமாவளிகள்

(108, 300, ஸம்மேளனம்)



ஸ்ரீ வித்யாநிதி வேத வித்யாசாலை

சிதம்பரம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

# கிடைத்தற்கரிய நூல்கள்

| | |
|---|---|
| தில்லைத் திருநடனம் (ஸ்ரீ நடராஜப்பெருமான் திருக்கயிலை யிலிருந்து தில்லைக்கு வந்த விதப் நாடகத் தமிழில்) | 3-5( |
| இதயக்கோயில் (சிதம்பர தலத்தின் வடமொழி பஞ்ச புராண சுருக்கத் தமிழ் வடிவம்) | 3-2 |
| குஞ்சிதாங்க்ரிஸ்தவம் (உமாபதி சிவம் அருளியது வட மொழி நூல் தமிழுரையுடன் | 25-0 |
| ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாமாவளி (கிரந்த லிபி) | 12-0 |
| ஸ்ரீ நடேச ஸ்தோத்ராவளி (தேவநாகரிலிபி) 2 பாகமும் | 6-0 |
| ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி ஸஹஸ்ரநாமாவளி த்சைதி, 108 த்துடன் (கிரந்த லிபி) | 10-0 |
| ஸ்ரீ சிதம்பர கல்பம் ,, | 15-( |
| ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாமத் தமிழ்ச் சிற்றுரை (தேவநாகரியில் சுலோக நாமாவளியுடன்) | 11-( |
| ஸ்ரீ சிதம்பரம் நடராஜ மூர்த்தி நாமாவளிகள் (108-300-ஸம்மேளனம், தேவநாகரி-தமிழ் | 9- |

கிடைக்குமிடம்:

ஜி. பரமேஸ்வர தீக்ஷிதர்,
ஸ்ரீ விதயாநிதி வேத ஸம்ஸ்க்ருத வித்யாசாலை,
85. தெற்கு ரத வீதி, சிதம்பரம்-608001.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உ

ஸ்ரீ சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ சிதம்பர த்ரிசதீ

(ஸ்ரீ வித்யாநந்தநாத சரிதத்துடனும்
தமிழில் எளிய உரையுடனும்)

# ஸ்ரீ நடேச அஷ்டோத்தர சதநாமங்கள்

# ஸ்ரீ தாண்டவ ஸம்மேளன அஷ்டோத்தர சதநாமங்கள்

தமிழுரையுடனும் கூடியது

வெளியிடுபவர் :

ஜி. பரமேஸ்வர தீக்ஷிதர்,

ர்வாகி, ஸ்ரீவித்யாநிதி வேதஸம்ஸ்க்ருத வித்யாசாலை,

85, தெற்கு ரதவீதி, சிதம்பரம் - 608 001.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

முதற்பதிப்பு 1991 டிசம்பர்

நூல்கள் கிடைக்குமிடம் :-
**G. பரமேஸ்வர தீக்ஷிதர்**
85, தெற்குவீதி, சிதம்பரம் – 608 001.

அடக்க விலை ரூ. 9-00

அச்சிட்டோர் :-
**கணபதி பிரிண்டர்ஸ்,**
5, மாயூரநாதர் வடக்குவீதி,
மயிலாடுதுறை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

# முன்னுரை

உலகம் எல்லாவற்றையும் ஆக்கி, அளித்துக் காத்து, அழித்து, அருள ஆற்றல் பெற்ற அதே சித் சக்தி பரஞ்ஜோதி தான் சிதாகாசப் பெரு வெளியாகிய சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜ ராஜப் பெருமானாக திருவுருக்கொண்டு, தாமும் ஆனந்தக் கூத்தாடி அனைத்துயிரையும் ஆட்டுவிக்கின்றது.

ஜீவராசிகளுள் உயர் பிறப்பாகிய மனிதப்பிறவி அளித்த அப்பரம்பொருளை வேத புராணங்கள் வாயிலாகப் பெரியோர் களுடன் நற்பணிபுரிந்து. அறிந்து, சுகதுக்கங்களுக்கு ஏதுவான இந்த பிறவிப் பெருங்கடலை நீந்தி பேரின்பப் பெருவாழ்வு அடைய முயலுவதே மனிதப் பிறவியின் பயனும்.

மற்ற மூன்று யுகங்களினும் பாவமணம் பரவி, பரம் பொருளை அடைய அரிய தவங்களை இயற்ற இயலாத இக் கலியுகத்தில், இறைவனது புகழ் பரப்பும் திருநாமங்களை அன்போடும், பக்தியோடும், ஓதுவதாலேயே மேற்கூறிய பேரின்பப் பெருவாழ்வு எளிதில் கிட்டும்.

அப்படிப்பட்ட திருநாமங்களில் வேதங்கள் வழிவகுத்த புராணப் பெருமையுற்ற நாமங்களில் சிவநாமங்கள் உயர்ந்தன. புண்ணியம் மிகுதி ஈட்டினோர்க்கு சிவநாமங்களில் அன்பு உண்டாவது கண்கூடு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



இத்தகைய சிவநாமங்கள் உலகினில் "எண்ணாயிரங் கோடி" என சிவனருட் செல்வர்களால் உரைக்கப் பட்டிருப் பினும், சிவனிலும் துரிய சிவனெனப் போற்றப் பெறுகின்ற சிவகருணைமூர்த்தி ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தியின் திருநாமங் கள் உலகில் கிடைத்தற்கரியதாகத் தோன்றுகின்ற காரணத் தினால், சிதம்பரத்தில் நடராஜப்பெருமானது மறு உருவாக அவதரித்து விளங்கி வந்தவர்களான ஸத்குரு சரணங்கள் ஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதர் அவர்களுடைய கோசத்தி லிருந்து அவர்களாலேயே எடுத்தருளப்பெற்று அவர்களே எழுதிய கைப்பிரதிகளையும் மற்றும் பல பிரதிகளையும் கொண்டு பரிசீலித்து உரையுடனாக ஸ்ரீசிதம்பரத்ரிசதீ-ஸ்ரீ நடேச அஷ்டோத்தர சத நாமங்கள் - ஸ்ரீ தாண்டவாஷ்டோத்தர சதநாமங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் ஸ்ரீசிதம்பரத்ரிசதி சிவமஹாமந்த்ரமான ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் அக்ஷரங்களால் ஆன பெருமையுடையது. ப்ரதோஷம், திருவாதிரை, திங்கட் கிழமை, வெள்ளிக்கிழமை முதலான புண்ய காலங்களில், சிவஸன்னிதி - வில்வ மரத்தடியிலோ - புண்ய தீர்த்தக் கரை யிலோ ஜபித்த மாத்திரத்தில் பெரிய சாந்திகளுக்கு ஒப்பாம். விரும்பிய அனைத்தையும் பெற திருவாதிரையில் தொடங்கி மறு திருவாதிரை வரை அந்தந்த தினத்துக்குரிய எண்ணிக்கை யில் ஜபிக்க வேண்டும். சுத்தனோ அசுத்தனோ எப்போதும் ஜபிக்கச் சொன்ன நாம மகிமை இதற்கே உரியது.

இதுபோலவே ஸ்ரீதாண்டவாஷ்டோத்தர சதநாமங்களும் அம்மையையும் அப்பனையும் ஒருங்கே துதித்து அர்ச்சிக்க வல்ல ஸம்மேளன நாமாவளிகளாக வழங்கப்பட்டுள்ளன. அனைத்து பலன்களையும் பெற தினமும் ஓதத்தகுவது. வில்வ தளங்களாலும், தும்பை, எருக்கு மலர்களாலும், சம்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களாலும் அம்பிகையோடு கூடிய ஸ்ரீசிவனை தினமும் முக்காலும் பூசித்தல் நன்று. இதனால் ஸர்வ பாவங்களிலிருந்து விடுபட்டு எல்லாவற்றையும் அடையலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



இவைகளைக்காட்டிலும் அதிசுலபமாகத் தோன்றுகிற ஸ்ரீ நடேச அஷ்டோத்தர சத நாமங்களுக்கு அளவிடற்கரிய பெருமை உள்ளது.

ஸ்ரீநடேச ஸஹஸ்ரநாமத்தை அறிந்தது போலவே ஸ்ரீ சிவனிடம் இதையும் ஸ்ரீமஹாவிஷ்ணுவே முதலில் கேட்டு அறிந்து வெளியிட்டார்.

ஸ்ரீதாண்டவ ஸம்மேளனம் போலவே இந்த அஷ்டோத்தர சதநாமங்களும் பெண்பால்-ஆண்பாலாகப் பகர்ந்து ஓதி அர்ச்சிக்க உரியன.

மஹாம்ருத்யுஞ்ஜய ஸம்புடத்துடன் கூடிய ஸ்ரீமத் பஞ்சாக்ஷரத்துடன் வரையப்பட்ட யந்திரத்தினைக் கும்பத்தில் வைத்து பூஜித்து இதனது உத்திரபீடிகையில் உரைத்தவாறு ஹோமங்களைச் செய்து ஜபித்து பலவிதமான பயன்களை அடையலாம். தகுந்த பெரியோர்களிடம் கேட்டு அறிந்து அனுஷ்டித்து ஸ்ரீ நடராஜ ராஜ கிருபையை அடையவும்.

சிதம்பரம்,
4—12—91.

ஸ்ரீ நடராஜர் கிருபை புரிவார்,
**G. பரமேஸ்வர தீக்ஷிதர்.**

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

# இந்நூலின் பிரயோக முறைகளும், பெறும் பயன்களும்.

ஸ்ரீ சிதம்பரேச்வர அஷ்டோத்தர சதநாமாவளி (II) தினமும் காலையில் – தீபத்திலோ நடேசருடைய விக்ரஹம் அல்லது படத்திலோ வில்வம், மகிழம்பூ போன்றவற்றால் அர்ச்சிக்க இஷ்டங்கள் அனைத்தும் பெறலாம். சுகவாழ்வு, சத் புத்ர பிராப்தி, சிரஞ்ஜீவித்வம்உண்டு.

ஸ்ரீ தாண்டவ அஷ்டோத்தர ஸம்மேளனத்தை தினமும் முக்காலமும் பக்தியுடன் வாஸனைப் புஷ்பங்களாலும், வில்வ தளிர்களாலும், தும்பை, வெள்ளெருக்கு சம்பக மலர்களாலும் பூஜிப்பதால் ஸமஸ்த பாபங்களினின்றும் விடுபட்டு எல்லா நன்மைகளையும் பெறலாம்.

ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர மயமான நடேச த்ரிசதி நாமாவளி களால் தினந்தோறும் மூன்று ஸந்திகளிலும் அல்லது பிரதோஷம், திருவாதிரை ஸோமவாரம், தமது ஜன்ம நக்ஷத்ரம் ஆகிய தினங்களிலும் உயர்ந்த வாஸனை மலர் களுடன் மணமுள்ள வில்வ பத்ரங்களால் சிரத்தையுடன் பூஜித்தால் அடையும் பயன்களாவன: 1 க்ஷுத்ர்சாந்திகரம் ஸர்வ ஸம்பத்கரம் 3. ஆயுராரோக்ய தாயகம் 4. சிவ ஸாயுஜ்யம்.

இவை பெரியோர்களது அநுபவ பூர்வமான
ஸத்யம் — சிவம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உ

ஸ்ரீ சிவமயம்

# உரையாசிரியரது ஜீவிய சரிதம்

பூஜ்ய ஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதரவர்கள் சிதம்பர மஹா க்ஷேத்திரத்தில் கதகலி 5003 சுபகிருது வருஷம் ஐப்பசி மாதம் 29-ம் தேதி (14—11—1902) வெள்ளிக் கிழமை அச்வினி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மகர லக்னத்தில் பூஜ்யஸ்ரீ க. மீனாக்ஷிசுந்தர தீக்ஷிதர் அவர்களுக்கும், ஸ்ரீமதி சிவகாமசுந்தரி அம்பாள் அவர்களுக்கும், ஸ்ரீ நடராஜ ராஜ பரப்ரம்ம அம்சமாக அவதரித்தார்கள்.

இவர்கள் தமது 6-வது வயதிலேயே விநாயக ஆராதனம் மேற்கொண்டவர்கள். பின்னர் சின்னாட்களில் இவர்களது பிதா சிவஸாயுஜ்யம் அடைந்தபடியால், தமது தாய் மாமனுடைய மேற்பார்வையில் வளர்ந்தார்கள்.

பூஜ்யஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதர் அவர்கள் ஸித்தார்த்தி வருஷம் ஆனி மாதம் 23-உ (7—7—1919) ப்ரம்ஹஸ்ரீ சிவகாமசுந்த்ர தீக்ஷிதர் அவர்களுடைய கனிஷ்ட குமாரத்தி சௌ: முத்துக்குஞ்சலாம்பாள் அவர்களை ஸ்ரீ சிவகாமியின் அம்சமாக பாணிக்ரஹணம் செய்து கொண்டார்கள்.

சிதம்பரம் கீழரத வீதியில் வடகோடியில் அமைந்த ராம. சு. வேதஸம்ஸ்க்ருத வித்யாசாலையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ வேத சாஸ்த்ர வல்லபர்களாக விளங்கிய ப்ரம்ஹஸ்ரீ ராகவ சாஸ்திரிகள் அவர்களிடம் ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத மந்த்ர பாக அத்யயனமும், மீமாம்ஸா சாஸ்த்ர பாண்டித்யமும் அக்குருநாதருடைய பரிபூர்ண அனுக்ரஹத்துடன் அடைந்தார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



சுக்ல வருஷம் மாசி மாதம் 13-ம் தேதி தமது 27-வது வயதில் ஸ்ரீ ஸ்வாமிமலை ஸ்வாமிநாத ஸ்வாமி ஸன்னதியில் (கவிதா) வாக் சக்தி ஏற்பட்டு, சுமார் 12 வடமொழி ஸ்லோகங்களுடன் சார்த்தூல விக்ரீடித வ்ருத்தத்தில் ஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்வாமியின் த்யானம் அமைந்த ச்லோகத்தையும் இயற்றி அவ் விறைவனுக்கு அர்ப்பணம் செய்தார்கள்.

இவர்களுக்கு இந்த வாக் ஸித்தி அனுக்கிரஹம் "வல்லீ பரிணய சம்பு" என்னும் வடமொழி நூலை வாசித்த போதே ஏற்பட்டதாகக் கூறுவார்கள்.

மஹோமஹோபாத்யாய சிவ. தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதரவர்கள், தர்க்க சாஸ்த்ரஞ்ஞ சித. நடேச தீக்ஷிதரவர்கள், மன்னார்குடி மஹான் ராஜு சாஸ்திரிகளவர்களது சிஷ்யர்களுள் ஒருவராகிய பரமேஸ்வர தீக்ஷிதர்வர்கள், ஸ்ரீ பதஞ்சலி பகவான் அவதாரரும் பூஜா ஸூத்ர ப்ரயோக ரத்னமுமாகிய, ஸ்ரீ ராஜரத்ன தீக்ஷிதர் அவர்கள் ஆனந்த தாண்டவ தீக்ஷிதர் முதலாகிய மூத்த வித்தியா ரத்னங்களுக்கு முன்பாக இவர்கள் தாம் இயற்றிய ஸ்ரீநடேச ஸஹஸ்ரநாம பாஷ்யம், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராமற்சம் (விமர்சம்) ஆகிய கிரந்தங்களைத் தாமே வாசித்துக் மேற்கூறியவர்களிடம் பரிபூர்ண ஆசி பெற்றவர்கள். பின்னர் இக் கிரந்தங்களைப் புண்ய வசமாக ஸ்ரீராமசுப்பர் சாஸ்திரிகள் அவர்கள் முழுதும் ஆராய்ச்சி நோக்கில் பரிசீலித்துநோக்கி மிகுந்த ஆச்சரியத்துடன் ஆசியும் வழங்கினார்கள்- இச் சமயங்களில்லெல்லாம் ப்ரம்ஹ பூய்ங்க தாளான ஸ்ரீ சோமசேகர தீக்ஷிதர் அவர்களும் உடனிருந்து எல்லாவற்றையும ஆவலுடன் கண்டு களித்தவர்களுள் ஒருவர் ஆவார்கள்.

அனேக மந்த்ர சாஸ்த்ரக்ஞ ப்ரம்ஹஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களிடமும், மற்றும பல அறிவு முதிர்ந்தோர் களிடமும், அநேக மந்த்ர சாஸ்திரங்களையும், அந்தந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



குருவினுடைய பரிபூர்ண அனுக்ரஹத்துடன் ஏற்றுக் கொண்டு அனுஷ்டித்து வந்தார்கள்.

மேலும் தாம் பெற்ற எல்லா மந்த்ரங்களையும் தமது இறுதிக்காலம் வரை அன்புடனும், பக்தியுடனும், முறையுடனும், தினந்தோறும் அநுஸந்தானம் செய்து அனுஷ்டித்தும், அவற்றில் பல மந்திரங்களை ஸித்தி செய்து கொண்டும், வாழ்ந்து வந்தவர்கள் ஆவார்கள். அதனால் தாம் அடைந்த வித்யைகளைப் பலருக்கு உபதேசித்தருளியும், இந்த மந்திரங்களின் ஸித்தியால் அனேகருக்கு உதவிகளைச் செய்தும் வந்தார்கள்,

ப்ரம்ஹஸ்ரீ ஞானமூர்த்தி தீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ஹஸ்ரீ ராஜரத்ன தீக்ஷிதர் அவர்கள், நமது ஐயா (க. மீ. ராஜகணேச தீக்ஷிதர்) அவர்கள், ஆகிய மூவரும் ஸ்ரீ சிதம்பர கல்ப மற்றும் மந்த்ர சாஸ்த்ர ஆய்வு விஷயங்களில் மும்மணிகளாக விளங்கி வந்தார்கள்.

பூஜ்யஸ்ரீ நமது ஐயா அவர்கள் தமது காலத்திலேயே தான் ஸ்ரீ சிதம்பர யந்த்ர — மந்த்ர விதானங்கள் பலவற்றையும் நன்ருக ஆராய்ந்து, வெளிப்படுத்தினார்கள். அப்படிச் செய்து வருகின்ற நாளில் சிதம்பர ஸ்தலத்துக்கு உண்டான ஐந்து புராணங்களுள் ஒன்ருன " ஹேமஸபா நாத புராணம் " என்கிற நூலை இம்மும்மணிகளுடைய அநுகூலத்துடன் 'ஸ்ரீ சபாபதி நாவலர்' என்னும் தமிழறிஞர் தமிழாக்க நூலை வெளியிட்டனர். அந்த சந்தர்ப்பங்களில் இம்மஹானுடைய தமிழ்ப்பற்றும் மொழியறிவும் 'ஸ்ரீசபாபதி நாவலருக்கு' சிறந்த பயன் தந்தது.

சுவாமிகள் திருப்பணி செய்த நவலிங்க ஆலய கும்பாபிஷேகத்தை இந்த மஹான் முழுமையும் பொறுப்பேற்று ஸர்வ ஸாதகம் (ப்ரயோகம்) செய்து பெயர்பெற்றார்கள், அப்போது பூஜ்யஸ்ரீ ஐயா அவர்களது பெரிய தந்தையான

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



ஸ்ரீ சபாநந்த தீக்ஷிதரவர்கள் அந்த ஸதஸ்ஸில் மேன்மை பெற்ற முதலிடம் (அக்ரஸ்தானம்) வகித்தவர்களான மஹா மஹோபாத்யாய சிவ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதரவர் களிடத்தில் இவர்களுடைய திறனை எடுத்துக் கூறவே அது கேட்ட ஸ்ரீ தீக்ஷிதரவர்களும் " இவ்வளவு சிறப்புற நடத்தி வைக்க எம்மாலும் ஆகாது " என்று உயர்வு படக் கூறி " இவன் பிற்காலத்தில் நம் தீக்ஷித ஸமுதாயத்துக்கும் சிதம்பரம் ஆலயத்துக்கும் மிகுந்த தொண்டுகள் புரிந்து ஸ்ரேயஸ்ஸாக ப்ரகாசிப்பான் " எனவும் உளமாற ஆசீர் வதித்தனராம்.

இம்மஹான்களுடைய முற்காலம் வரை வெறும் ஏட்டுச் சுவடிகளில் மட்டுமே இருந்து வந்த ஸ்ரீ சிதம்பரம் க்ஷேத்ர உத்ஸவப்ரதிஷ்டை, நித்ய நைமித்திக கல்பங்களையும், தகர வித்யா கண்ட முதலான மந்த்ர சாஸ்திரங்களையும் ஸ்ரீ சிதமபர ரஹஸ்யம் முதலான இதிஹாஸ கிரந்தங்களை யும், ஸ்ரீ வித்யையின் அதி ரஹஸ்யமான நாபி வித்யா ராஜ வித்யா, மந்த்ர விக்ரஹ கவசம், மஹா ஷோடசீ வித்யா பர்யாயங்கள் ஆகியவற்றையும் வைதீக மார்க்க பூஜா பாதஞ்ஜல ஸ்ரீ வித்யா நவாவரண பூஜா விதானங்களையும், அநேக தேவதைகளின் ஸகஸ்ரநாமங்களையும், பூஜா விதான யந்த்ரங்களையும், மிக மிக அழகான முறையிலும் எழுத்து மட்டுமே உணரக் கூடிய பாமரர்களுக்கும் புரியும் வண்ணம், தமது திருக்கரங்களால் புத்தக வடிவில் எழுதி வைத்திருக்கின்றார்கள். இவர்களது ஆய்வுடனும் தமிழுரை யுடனும் அச்சிட்டு வெளிவந்த " குஞ்சிதாங்க்ரி ஸ்தவம்" " ஸ்ரீ நடேச ஸகஸ்ரநாம பாஷ்யம் " நூல்களும் வருங் கால இளைய தலைமுறையினரிடம் இவர்களுடைய பரிவு உயர்வையும் தீர்க்க தர்சனத்தையும் உணர்த்தும்,

இது போலவே ஸ்ரீஸம்மேளன நடேச ஸஹஸ்ர நாமங் களை அவற்றின் அக்ஷர லக்ஷண த்யான முதலிய குறிப்புக

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



களுடன் அச்சிட்டு, வெளிப்படுத்தி ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய குலக் கொழுந்துகளாக விளங்கி வருகின்ற தில்லைவாழ் அந்தணப் பெருந்தகைகளான தீக்ஷிதர் குழந்தைகளுக்கு ( நமது காலத்திலும், பிற்காலத்திலும், வரும் வாரிசுகளுக்கு ) யாதொரு சிரமமும் இல்லாதவாறு ஒரு பயனும் கருதாது, அரியதொரு, உதவி புரிந்து உயர்வை அடைந்தார்கள்.

இத்தில்லைத் தலத்தில் விளங்கும் ஸ்ரீ முக்குறுணி விநாயகர், ஸ்ரீகற்பக விநாயகர், ஸ்ரீ பாண்டிநாயக சுப்ரம்மண்யர் ஸ்ரீ காலஸம்ஹார மூர்த்தி முதலான பரிவாரங்களுக்கும் மன்மத வருஷம் ஆனி மாதம் 23-ம் தேதி (7—7—1955) வியாழக்கிழமை ரிஷப லக்னத்தில் நடைபெற்ற ஸ்ரீ சித்ஸபா ஸம்ப்ரோக்ஷணத்துடன் ஸ்ரீ நடராஜராலய மஹா கும்பாபிஷேகத்தைத் தமது 53-வது வயதில் பிரதான ஆசார்யராக இருந்து நடத்தினார்கள். பின்னர் 6—2—1972 ல் நடைபெற்ற ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை தமது 70-வது வயதிலும், வெகு திடத்துடன் தமக்குத் தாமே ஸாதகமாகி ஸர்வ ஸாதகமும் செய்து கொண்டு, ப்ரதான ஆசார்யர்களாக விளங்கினார்கள். முற்கூறிய அனைத்து கோவில்களிலேயும் இவர்களது உத்தரவின் பேரில் பல மேன்மைகளை அந்நிர்வாகிகள் செய்து, அதனால் என்றும் பெருமை அடைந்து வருகிறார்கள், எடுத்துக் காட்டாக ஸ்ரீ கன்யகா பரமேச்வரி அம்பாள் மூல பிம்பம் பிரதிஷ்டை செய்யச் சொன்னதும், நூதன ஆலயம் அமைக்கச் சொன்னதும், ஸ்ரீ காலநாதஸ்வாமிக்கு நூதன ஆலயம் அமைக்கச் சொன்னதும், அவ்விதமே அமைந்த பின் கும்பாபிஷேகத்தை ஏற்று நிர்விக்கனமாக நடத்தி இவற்றுக்கு நித்ய பூஜைக்கும் தடையின்றி நடக்க வாக்கு அருளியதும் இவர்களது தூய அன்புக்கு அடையாளங்களாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



சுமார் 15-வருஷங்களாக மேற்கூறிய கைங்கர்யங்களுக்கு எந்த விதமான வெகுமதியும் பெற்றதில்லை. இதில் அவர்கள் கண்டிப்பான மறுப்பை முதலிலேயே அறிவித்து விடுவார்கள் எந்த ஸமயமும் இதனால் அவரிடம் வற்புறுத்தி எதையும் யாரும் கொடுக்க முடித்ததில்லை,

ஸ்ரீ சிவகாமஸுந்தரி அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீ சித்ர குப்த ஸப்தமாதாக்களை பிரதிஷ்டித்தார்கள், சுதை வடிவில் இருந்து வந்த ஸ்ரீ சக்ரராஜ யந்த்ரத்தைத் தனி ஆலயத்தில் உயர்தர சாளிக்ராம சிலாரூபமாகச் செய்து புனருத்தாரணம் செய்வித்தார்கள். ஸ்ரீ சிவகாமஸுந்தரி அம்பாளுக்கு ஸ்ரீ சக்ரதாடங்கப்ரதிஷ்டை செய்தவர்கள் ஸ்ரீ துர்க்கா ஆலயத்தின் விமானம் கட்டும்படி ஆக்ஞாபித்தருளியும், ஸபையில் ஜைமினி மஹரிஷி பிம்பப் ப்ரதிஷ்டையும், ஸ்ரீ மூலஸ்தான த்வாரபாலகப் ப்ரதிஷ்டையும் செய்தவர்கள், அம்பாள் கோவில் ஆயிரங்கால் மண்டபம் போன்ற இடங்களில் இந்த ஸ்தலத்துக்கும் மூர்த்திக்கும் பெருமையை அளிப்பதான புராண சம்பந்த வர்ண சித்ர கலாபங்களை அமைக்கச் சொன்னதும் இவர்களே. சிவ ரஹஸ்யம் முதலானவற்றில் கூறப்பட்ட சிதம்பர ஆலய பரிவார ஸ்தலங்களை பட ரூபமாக எழுதி வெளிப்படுத்தினார்கள். சாஸ்தா யந்த்ரம், கல்யாண வரத சாஸ்தா ஆகிய சித்திரங்களை எழுதி ஐயப்ப ஸன்னதியில் வைக்கதகுந்த ஆதாரங்களை அளித்தவர்கள்.

இருபத்தோரு (21) படி குறட்டிற்த மேல் நடவானப் பத்தி சேருமிடத்திலும், ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் கோவிலில் சொக்கட்டான் மண்டபத்தில் தள வரிசை அழகு படுத்தச் சொல்லி அதன் மத்தியிலும், ஸபை பாண்டிய நாயகம் இவற்றில் உள்ளவை போல கமலங்கள், போடும்படி சொல்லி அமைத்தவர்கள்,

தில்லையில் சிறந்த தமிழறிஞராகவும் சைவ தீக்ஷா தேசிகராயும் விளங்கி வந்த ஸ்ரீ ந, சிவப்பிரகாச தேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an



அவர்களுக்கு ஆசியும், அன்பும், ஆதரவும், அறிவுரைகளும் வழங்கியவர்கள்.

அன்னார் வெளிப்படுத்திய மஹா ம்ருத்யுஞ்ஜய ஆயுள் ஹோம பத்ததி, திருமந்திரமாலை முந்நூற்றின் உரை ஆகிய நூல்களுக்கு மிக்க உறுதுணை புரிந்தவர்கள்

இதுபோன்று முதன் முறையாக ஸ்ரீ ஐயப்ப த்ரிசதி உரையும், ஸ்ரீ ஐயப்ப சுப்ரபாதம், ஸ்ரீ ஐயப்ப ஸஹஸ்ரநாம அஷ்டோத்தர சத நாமாவளிகளுக்கும் தமிழுரை எழுதி அருளிச் செய்து, சிதம்பரத்தில் பிரபல ஸ்ரீ சாஸ்தா உபாஸகராக விளங்கிய ஸ்ரீ ப்ரபு கிருஷ்ணமூர்த்தி ஐயப்பன் அவர்களைக்கொண்டு அந் நூல்களை நல்ல முறையில் வெளியிடவும் செய்தார்கள்.

இவர்கள் பல தீக்ஷிதக் குழந்தைகளுக்கு வேத சாஸ்த்ர பூஜா விதானங்களைக் கற்பித்தும், மற்றும் விரும்பிய அன்பர்கள் பலருக்கும் சாஸ்த்ர, லக்ஷண, காவ்ய க்ரந்தங்களைக் கற்பித்தும் வந்தார்கள்.

இவ்விதம் அநேகம் சிஷ்யர்களை ஆட்கொண்டவர்களாக இருந்தபோதிலும், இவர்கள், புல்லறிவினனான அடியேனை (ஜி. பரமேஸ்வர தீக்ஷிதரை) சிதம்பர சித்ஸபையில் ஒரு குரு வாரம் ஸ்வாதீ நக்ஷத்ரம் ப்ரதோஷ வேளையில் அடிமையாகக் கொண்டு அருளியவர்கள். அன்றே இவர்கள் தமது க்ருஹத்துக்கு அடியேனை வரும்படி அழைத்தருளினார்கள்.

அவ்வாறு சென்ற அடியேனுக்கு ஸ்ரீ நடேச ஸஹஸ்ர நாம பராமர்ச விமர்சம், ஸம்மேளன நடேச நாமா ஆகிய நூல்களை ஆசியுடன் தந்தருளி உடன் எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கியவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



எளியேனுக்கு "திருவிடைமருதூரில் எப்பொழுது வேத அத்யயனம் முடியும்"? என அடிக்கடி அன்புடன் வினவி வந்தார்கள். அப்படி முடிந்து வந்த பிறகு அடியே னுக்கு ஸம்ஸ்க்ருத சாஸ்த்ர அப்யாசம் செய்விக்க எண்ணி "சம்பு ராமாயணம், சம்பு பாரதம், வேணீ ஸம்ஹாரம், சாகுந்தலம், ப்ரதாப ருத்ரீயம், ம்ருச்சகடிகம், மேக ஸந்தேசம், ஸபாபதி விலாஸ நாடகம், முதலிய வடமொழி சம்பு, நாடக, அலங்கார, காவ்ய சாஸ்திர க்ரந்தங்களையும், ஸ்ரீ ஸௌபாக்ய பாஸ்கரம், (ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்) உபநிஷத் ஸமுச்சய ப்ரம்ஹானந்த பாஷ்யம் முதலான வேதாந்த நூல்களையும் – தாயானவள் தன் சிறு குழவிக்கு பசி அறிந்து புகட்டுவது போல போதித்தார்கள். இருப் பினும் ஜீரணிக்க இயலாத ஸமயங்களிலும் தமது அருட் சக்தியினால் உணர்த்தியிருக்கிறார்கள்.

1968-ம் ஆண்டு இரண்டாம் முறையாக நடைபெற்ற ஸ்ரீ பாண்டியநாயக சுப்ரமண்ய ஸ்வாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் முதல் அடியேனுக்கு ஸர்வ ஸாதகப் பொறுப்பு அருளிச் செய்தவர்கள் ஆவார்கள்.

இவர்களுடைய வாழ்க்கையில் எப்பொழுதும் அதிசயிக் கத்தக்க பற்பல அரிய விஷயங்களை எளிய முறையில் வெளியிட்டுக் கொண்டே இருந்தபடியால் அடியேனுக்கு அம் மஹானைப் பிரிந்து இருக்கவே மனம் வந்ததில்லை.

சொல்ப புண்ணியம் இருந்ததனால் அடியேன் மிகுந்த பிற்காலத்தில் பிறந்து இவர்களுடைய கடைசி காலத்தி லேயே இவர்களிடத்தில் அணுகி, ஆசி பெற்றவன் ஆனேன். முன் வினையாலும் கூட பல ஸமயம் எளியேன் வெளியூர் சென்ற நாட்களிலும், அடியேன் நோயினால் வருந்திய நேரங்களிலும், இவர்களை விட்டு இருந்திருக்கிறேன். ஆயி னும் அப்போது கூட நினைவிலும், கனவிலும் பல அரிய விஷயங்களை அவற்றுக்கான ஆதரங்களுடன் உடனிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



உரைப்பது போன்று விளக்கி அருளிப் பல அற்புதங்கள் செய்து வந்திருக்கின்றூர்கள், திருவருள் துணையால் தக்க ஸமயத்தில் அவற்றை தேதிவாரியாகக் குறிப்பிட்டு வெளிப் படுத்தவும் விரும்பியுள்ளேன்.

1976-ம் ஆண்டு இவர்கள் அனுமதியுடன் இவர்களது ஜாதகத்தைச் சென்னை வாஸியான ஜோதிடர் ஒருவரிடமும் இலங்கை வாஸியான ஜோதிடர் ஒருவரிடமும் காண்பித்துக் கேட்டதில் அவர்கள் வெவ்வேறு இடங்களில் "பாவம்" சொன்னாலும் ஒரே கருத்துக்களையே கூறினூர்கள் அப்படிச் சொன்னதனைத்தும் இவர்களது வாழ்க்கையில் நடந்தவைகளே.

அதன் ஸாராம்சம் பின்வருமாறு :—

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப்போல் பாதத்தில்தான் இவர்களுக்கு உயிர். இவர்களது உடலமைப்பு, கலை வித்யை அறிவு எல்லாமே உயர்வு:

இவர்கள் தமது வாழ்க்கையில் எதிர்ப்பில் பலவற்றை மனம் வெறுத்து தியாகம் செய்தவர்கள்; ஒருபோதும் பிறர் தயவில் வாழ விரும்பாதவர்கள். சுய உழைப்பிலேயே முன்னுக்கு வந்தவர்கள்.

எதிலும் எதிர்ப்பு உள்ள ஜாதகமாயினும் மஹாலக்ஷ்மி எப்போதும் இவர்களைத் தேடி அடைந்து கொண்டிருப்பாள். இவர்களது ஜாதகம் ஆயிரத்தில் ஒரு ஸன்யாசி ஜாதகம் போன்ற மஹான்களுடைய ஜாதக வகை.

1920-ல் நிலையாக நின்ற இவர்கள் 12-வயதிலிருந்தே சொந்த உழைப்பில் வாழ்பவர். எல்லாவற்றிலும் எப்பொழுதும் முன் ஜாக்ரதை உள்ளவர்கள்,

2

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



மானுடர்கள் காண முடியாத அபூர்வ விஷயத்தைப் பார்க்க உள்ளார்கள், அதனல் இவரைச்சார்ந்து உள்ளவர்களுக்கும் சார்ந்தவர்களுக்கும் இவரது ஸமூகத்திற்கும் நன்மையே ஏற்படும்.

எதிலும் திடநம்பிக்கை, உறுதி, தெய்வீகம், தற்போது பெரியதோர் விஷயத்தில் ஈடுபட்டு எல்லோருக்கும் நன்மை தருவார்கள்.

நல்ல - ரொம்ப நல்ல - நேரத்தில் அவராக விரும்பிய படி ஸித்தி ஏற்படும்.

இவரை எதிர்த்து யாரும் எதுவும் செய்ய முடியவில்லே. இவர் ஆசியிஞல் வஸதியும், நன்மையும் அடைந்தவாகள் எதிர்த்து ஒன்றும் செய்வதற்கில்லே.

ஒரு வருஷத்திற்கு முன் தாம் நினைத்ததை இப்போது செய்யப் போகிருர்கள். திடீரென்று புதுத் தெம்பு வரும். சில ஸமயம் தன்னே மறந்த யோகநிலேயில் இருப்பார்கள், ஆயுள் பலம் இன்னும் 10 வருஷங்களுக்கு குறைவின்றி இருக்கிறது. ஆரோக்கியம் இவருக்கு நன்ருக உள்ளது. மருந்துகள் ஏதும் இவர்களுக்குத் தேவையில்லே எலலா மருந்து ஸத்துக்களும் இவர்கள் உடம்பிலேயே இருக்கின்றன.

இவர்கள் பல விஷயங்களுக்கு ஆதாரமாக இருப்பவர்கள். இரண்டு பேர் இவர்களே நிழல்போல் தொடர்ந்து உள்ளனர். தன்னே அடுத்த ஸ்தானத்தை யாருக்கு கொடுப்பது எனச் சிந்தித்துக்கொண்டே இவர்கள் இருக்கின்ருர்கள்.

யாதொரு ப்ரதிப்பிரயோஜனமும் கருதாமல் ஏணி போல் கைதூக்கி விட்ட இவர் செய்த உதவிகளுக்கு, இது வரை ஒருவரும் பூர்ணமான உதவி இவர்களுக்கு திருப்பிச் செய்யவில்லே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



அடிக்கடி உடற்சோர்வுற்றவர்கள் போல் காணப் பட்டாலும் சில நிமிஷங்களில் தானாகவே சரியாகிவிடும்,

இவர்களிடம் ஸந்தேகம், ஆலோசனை கேட்பவர்கள் உடனேயே இவர்கள் அதற்கு பதில் சொன்னபடி நடந் தால் நல்லது. மீண்டும் நமது கருத்தைச்சொல்லி குழப்பக் கூடாது. ஏனெனில் இவர்கள் திடீரெனச் சொல்வது பலிக்கும். அபூர்வ சக்தி அது.

தன் திறமை பூராவையும் இதுவரை இவர்கள் வெளிப் படுத்தவேயில்லை. சுமார் 15 தினங்களுக்குப் பிறகு இவர் தம் அபிலாஷையுடன் திறமைகள் யாவும் பூர்த்தியாக ஆரம்பிக்க இருக்கிறது, மிக அபூர்வமான விஷயம் இவர் பார்க்க வேண்டியுள்ளது. அதனால் எல்லோருக்கும் மிகுந்த நன்மை உண்டாகப் போகிறது. ஜோஸ்யர்களே பார்த்து ரொம்ப ஆசைப்படுகின்ற அளவுக்கு மிகு விசேஷமான ஜாதகம் இவருடையதாகும். இப்பேற்பட்ட மஹானை வாழ்நாளில் ஒரு தடவையாகிலும் அவசியம் தரிசிக்க வேண்டும், தரிசித்து இவரது ஆசி பெற அனைவரும். விரும்புவர், ''

என இம்மஹானுடைய ஜாதகத்தை 25 — 8 — 74-ல் '' பாவம் '' சொன்ன ஜோஸ்யரே இவர்களிடம் ஆசிபெற விரும்பியதால் அடியேன் சென்று ஐயா அவர்களிடம் அனுமதி பெற்று வந்து அழைத்தபின் அந்த ஜோஸ்யர் உடனே ஸ்நானம் செய்து மடி உடுத்தி விபூதி தரித்து ஆலயத்தில் சிவ தர்சனம் செய்யக் கிளம்புவது போல் பரமபக்தியுடன் புறப்பட்டு ஐயா அவர்களுடை கிருஹத் துக்கு அடியேனுடன் வந்து இவர்களுடைய அன்போடு கலந்த பூர்ண ஆசியைப் பெற்றதோடல்லாமல் ஐயா அவர் களது ஜாதகக் குறிப்பையும் வேண்டி விரும்பி பெற்றுக் கொண்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



மிக அழுத்தமான சைவ நம்பிக்கை, சாக்த மத உபாஸனை; பக்தியைக் காட்டிலும் சிவ பரம் பொருளை அடையும் மார்க்கம் வேறில்லை என்கிற உறுதியான எண்ணம். இவற்றை ஐயா அவர்கள் கொண்டிருந்தபொழுது பிற மதங்களையோ, பிற ஸமய மார்க்கங்களையோ, வெறுத்தவர் அல்லர். மாருக ஒவ்வொன்றிலும் நன்மை பயக்கும் விசேஷம் ஏதாவது உள்ளதாகவே கருதி வந்தார்கள்.

ஒரு ஸமயம் தமது குருநாதரிடம் அணிந்துரை பெற வந்திருந்த "லிங்க தாரண மீமாம்ஸா" என்ற ஓர் வீர சைவ நூலைப் பரிசீலனை செய்ய விரும்பாத தமது குருவின் வெறுப்பைக் கண்டும், நமது ஐயா அவர்கள் அந்த நூலைப் பரிசீலித்து அபிப்பிராயம் கூற, அதே குருவிடம் அனுமதியும் பெற்று, ஒரே வாரத்தில் அந்த நூலில் பரந்து காணும் சிவோத்காஷமான குணங்களை மட்டும் எடுத்துரைத்து, அதே குருநாதர் அவர்களுடைய வியப்புக்கும் போற்றுதலுக்கும். உரியவரானர்கள்.

இவ்வளவு வல்லமை பெற்றவர்களாயிருந்தும், தமக்குத் தெரிந்தது சிறிதே என்றும் "ஒன்றுமே தெரியாதவனும் எல்லாம் அறிந்தவனும் மானிட வர்க்கத்தில் இல்லை ஒவ்வொருவரிடத்திலும் ஏதேனும் விசேஷம் இருக்கும்" என்று அடிக்கடி கூறி அறிவுடையோராகவே மற்றவரையும் கருதி, மதித்து வாழ்ந்தவர்கள் நமது ஐயா அவர்கள்.

தம்மைச் சார்ந்தவர்களுக்கு நன்மதிப்பு உண்டாகவும் பொருள் சேரவும் அருள் கிடைக்கவும் அடிக்கடி பிரார்த்திருப்பார்கள்,

யாதாகிலும் ஒருவர் இவர்களுக்கு சிறியதொரு நன்மையைச் செய்ததாக எண்ணிவிட்டாலும், உடனே அவர்கள் செய்ததைவிட பதின்மடங்கு உயர்வாக அவர்களுக்குச் செய்ய நினைத்து அப்படியே செய்து முடிக்கும் ஸ்பாவம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



உள்ளவர்கள். பொதுவாக ஐயா அவர்கள் பிறருக்குச் செய்ய நினைக்கும் எந்த நன்மையையும், பாக்கி வைத்துக் கொண்டு பிறகு செய்யலாம் என்று எண்ணியதேயில்லை. ஒன்றே செய்யினும் நன்றே செய்வார்கள், நன்றே செய்யினும் அன்றே செய்து விடக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள் நம் ஐயா அவர்கள்.

தாம் எக்காரியம் தொடங்கினாலும் ஒரு விதமான தமக்கே உரிய கம்பீரமான உயர்ந்த திட்ட வட்டத்துடன் செய்யத் தொடங்கி, யாதொரு குறைவுமின்றிச் செய்து முடிப்பார்கள். அவர்கள் வகுத்துக் கொண்ட திட்டத்தில் ஏதேனும் இடையூறு வரும் போல் தோன்றினால் ஸமயோசிதமாக, ஸர்வ ஸாதாரணமாக அவ்விடையூறுகளைக் களைந்து திட்டமிட்டபடி காரியம் முடியும் வரை, மிகக் கவனமாக இருந்து முடித்தே தீருவார்கள்.

யாரிடமும் திடீரென அன்பு வைத்துப் பழகி விட மாட்டார்கள், அப்படியின்றி ஆழ்ந்து யோசித்து, அன்பு வைத்துப் பழகி விட்டார்களானால். அவர்கள் வைத்த அன்பை ஆவி பிரியும் வரை மாற்றினதும் இல்லை. ஐயா அவர்கள் வைக்கும் அனபுக்கு நம்மால் எவ்விதத்திலும் ஈடு கொடுக்க முடியாத அளவுக்கு மிக மிக உயர்வாகவே அவ்வன்பை மேன்மேலும் வளர்த்துக் கொண்டே போகும் ஸ்பாவம் படைத்த மஹான் ஆவார்கள்.

அடியேனுக்கு சிதம்பர க்ஷேத்திர ஸ்ரீ நடேச மூர்த்தியினது நித்ய, நைமித்திக. உத்ஸவ, ப்ரதிஷ்டா, பிரயோகங்களை மிக எளிதில் உணர்த்தினார்கள். பின் எமது தந்தையார் அவர்களுடைய சித் ஸபேச நூதன பூஜாரம்பத்தையும், கீலக-ஞு தை-மீ ரத ஸப்தமி புண்ய காலத்தில், அடியேனது நூதன பூஜையையும். ஸௌம்ய ஞு-ஆனி-மீ எமது பிதா அவர்களுடைய "ஆசார்யத்வ"

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



மஹோத்ஸவத்தையும், பின்னும் சிறியேனுடைய சாதாரண வருஷம மார்கழி மாத "ஆருத்ரா" உற்சவ ஆசார்யத் வத்தையும், பூர்ணமாக உடனிருந்து அறவுரைகள் வழங்கி ஆசீர்வதித்து இடையூறின்றி இனிதுநடத்தி வைத் தார்கள்.

எளியேனுடைய மூத்த குமாரனுடைய உபநயனத் தன்று ஸாயங்காலம் அடியேனது கிருஹத்துக்கு ஐயா அவர்கள் முதன் முறையாக எழுந்தருளி வந்து ஆசீர்வதித் தார்கள்,

பின்பு பிங்கல-ஞு மாசி மாதத்தில் இவ்ஏழையே னுக்கு மஞ்சட்காமாலை நோய் வந்து மிகவும் மோசமான நிலைமையிலிருந்த அன்று மாலை 7-மணிக்கு இரண்டாம் முறையாக எளியேனை நாடி கிருகத்துக்குத் தாமாகவே வந்து, பரிவுடன் பஞ்சாக்ஷரம் தந்தருளி உயிர்ப்பித்தனர். அதைறே நோய் குணமானது விந்தையிலும் விந்தையே யாகும்.

அது முதல் எமது குடும்பத்தினருக்கும், நமக்கு வேண்டியவர்கட்கும் நோயுற்ற போதோ, ஏதேனும் இடர் வந்த போதோ, ஐயர் அவர்களிடம் விபூதி பெற்றுச் சென்று கொடுப்பேன். உடன் நலமடைந்தது பல தடவை ஆயினும் நன்மைபெற வேண்டிய கால நேரம் வாய்க் குட்போது தான் ஐயா அவர்களிடம் சென்று விபூதி பெறத் தோன்றும், அதுவும் ஒரு விந்தையே! 1972 விரோதிக்ருது-ஞு தை-மீ நடந்த ஸ்ரீசிவகாமஸுந்தரி அம்மாள் கும்பாபிஷேக வைபவத்தில் ஐயா அவர்கள் தமது "பிரதான்ய ஆசார்ய" கைங்கர்யத்திற்கு 'என்னால் அறியாப் பதம் தந்து' எளியேனை ஸாதகனாகக் கொண்டு அருளி, அடிக்கொரு தடவை 'பரமேச்வரா' எனப் பெயர் சொல்லி அழைத்தழைத்து- அடியேனைப் புனித னாக்கியது என்றுமே மறக்க முடியாத அன்பு வலைப்பட்ட நாட்கள் அவை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



ஒருவருடைய ஸாதகமும் ஐயா அவர்களுக்கு அவசியமற்றதே! ஆயினும் தமது அன்புக்கு உகந்தவனாக ஊராருக்கு எளியேனைக் காண்பிக்கவே அப்பதவியை எமக்கு அளித்துக் கௌரவித்தார்கள்,

7—2—1979 காளயுக்தி-ஸ்ரீ நடைபெற்ற ஸ்ரீ மூலநாத மூலஸ்தான மஹா கும்பாபிஷேக வைபவத்தில் 33 குண்ட யாகசாலை நிர்மாண முதல் ஸர்வஸாதகமும் தான் ஒதுங்கியிருந்த தமியேனைத் தனியாக நிர்வகிக்கும்படி செய்தார்கள். ஆயினும் தாம் வந்துவந்து ஒவ்வொன்றையும் கவனித்து ரஸித்து, சிற்சில ஸமயங்களில் குறைகளைத் திருத்தியும், சில சமயங்களில் ' இனி நீ கவனித்துக் கொள்ளுவாய்; நமக்கு வேலை இல்லை; கவலை விட்டது! '' எனப் பெருமையுடன் தமக்கே உரிய பாணியில் உள்ளன்புடன். பாராட்டியும் மனமாற ஆசீர்வதித்து மகிழ்ந்தவர்கள்.

கவிதை இயற்றுப்போதும், திட்டங்கள் வகுக்கும் போதும், உரைகள் செய்யும் போதும் எம் போன்ற ஸாதாரணமானவர்கள் சொற்களையும் கூடஉகந்தவையாயிருப்பின் ஏற்றுக்கொண்டு ச்லாகிக்கும நெகிழ்ந்த ஸ்பாவம் ஐயா அவர்களுக்கு உண்டு, அப்போதெல்லாம், " யுக்தி யுக்தம் வசோ க்ராஹ்யம் பாலாதபி சுகாதபி " என்று நமது ஐயா அவர்கள் கூறி மகிழ்வோடு ஏற்கும் பெருந்தன்மை வாய்ந்தவர்கள் " பொருத்தமாக உரைக்கப்பட்ட வார்த்தையானது குழந்தையிடமிருந்தோ கிளியிடமிருந்தோ வந்தாலும் கூட (சொன்னது யாராயினும்) அது ஏற்றுக்கொள்ளத் தகுந்தது தான் " என்பது அவர்கள் சொல்வதற்குப் பொருளாகும்.

ஐயா அவர்களிடம் பழக ஆரம்பித்திருந்து, இன்று வரை அடியேன் அவர்களது வார்த்தைகளை மீறுது

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



உடனக்குடன் செய்து முடிக்கும் ஸ்பாவமும் ஐயா அவர்களை ப்ரத்யக்ஷ சிவனாகவும் ஸ்ரீ தேவிசிவகாமி அம்பிகையாகவும், கருதியும் அடியேன் வழிபட்டு உயர்ந்தற்கு அவர்களது ஆசியும் அன்புமேதான், காரணம். ஐயா அவர்கள் அடிக்கடி தமது தர்மபத்தினி முதல் தமது அன்பர் பலரிடத்திலும், யாவரிடமும், தமக்கு அடுத்த வாரிசு இவன்தான் என்று கூறிப் பெருமைப் படுத்தினார்கள்.

ஸ்ரீ சிவகாம ஸௌந்தரி அம்பிகை மந்திரத்தை ஸித்தி செய்து கொண்டு எப்பொழுதும் அவ்வம்பிகையினிடத்து நீங்காத உணர்வுடன் வாழ்ந்தவர்கள்,

சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆலயத்தில் ஐயா அவர்கள் அமரும் வழக்கமுள்ள இடங்கள் மூன்று. அவற்றில் தினமும் அதிக சமயம் (1) ஸ்ரீ சட்டநாதர் ஸந்நிதிக் கொரடும், பகலில் (2) ஆட்கொண்டார். மேல் புறம் கொரடும், இரவு அர்த்தஜாம ஸமயத்தில் கீழ்புறம். (3) அய்யாக்கொண்டார் கொரடும் ஆகும். இவை தவிர கோவிலில் வேறு எந்த இடத்திலும் ஐயா அவர்கள் விச்ராந்தி செய்யும் வழக்கமில்லை. ஆனாலும் முறை நிமித்தம் அடியேன் இருக்குமிடங்களில் மட்டும் அவ்வப்போது அடியேனால் விரும்பி ப்ராத்திக்கப்பட்டால் மறுக்காமல் அமர்ந்து அருளுவார்கள்,

ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் கோவிலும், நிருத்த சபை ஸ்ரீ சரப மூர்த்திக்கு கிழக்கு அங்கணமும் ஜப யோகம் செய் வதற்கு ஐயா அவர்கள் மிக விருப்பி இருந்து அருளும் இடங்கள்

ஆலய பிரகாரங்களில் ப்ரதக்ஷிணம், வருவதிலும், ஸ்வாமி தர்சனத்திலும், ஜபங்கள் செய்வதிலும், எப்போ தும் ஒரே மாதிரியான க்ரமமான நியதியை வைத்துக் கொண்டிருந்தார்கள். இவற்றில் ப்ரதக்ஷிணம், ஸ்வாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



தர்சனம், இவற்றின் முறைகளை உடன் சென்று அறிந்து கொண்ட போதிலும், ஜப க்ரமங்களைப் பல தடவைகளில் முயன்று கேட்டும் சொல்லவில்லை. ஆயினும் குறிப்பால் உணர்த்தியிருக்கின்றார்கள்.

ஐயா அவர்கள் அடியேனிடத்தில் இவ்வாறு இவ்வளவு க்ருபை செய்திருந்த போதிலும் 15 வருஷங்களுக்கு முன்பே ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம பாஷ்யத்தைப் ப்ரதி செய்து வெளியிடும்படி அடியேனுக்கு உத்திரவிட்டார்களாயினும், 'பாவியேன்' இன்றுவரை அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமல் இருந்து வருவது ஐயா அவர்களுக்கு அடியேன் துரதிருஷ்டவசமாகச் செய்த த்ரோகமாகவே கருதுகிறேன். விரைவில் ப்ரதி செய்து அச்சிட்டு பூர்த்தி செய்யவும நல்ல முறையில் வெளியிடவும், முயன்று வருகிறேன. அதையும் ஐயா அவர்களது அருள் செலுத்தும்.

ஐயா அவர்கள் கடந்த ரக்தாக்ஷி ஆண்டு புரட்டாசித் திங்கள் 10-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை (26—9—84 முதல் 1—10—84) வரை முக்யமான நூல் ஒன்றைத் தேடும் வ்யாஜத்தில், அடியேனுக்குத் தமது புஸ்தகாலய கோசங்களாகிய அனைத்துக் கல்விப் பொக்கிஷங்களையும், திறக்க அநுமதி வழங்கித் தாமும் உடனிருந்து, எல்லாவற்றையும் விளக்கியருளினார்கள். அப்படித் தேடிய அந்நூல் அப்போது கிடைக்காது போகவே, மீண்டும் அதைத் தமது மேதா விலாஸத்தினால் அநுஸந்தானம் செய்து அந்நூலையும, அந்நூலில் உறைக்கப்பட்ட க்ரியைகளையும், ஆற்றும் விதத்தை எளிதாக அனுக்ரஹித்த அற்புத மஹானுவார்கள்.

அவ்வருஷ நவராத்திரி வேத பாராயணத்தை ஐயா அவர்களது க்ருஹத்திலேயே அடியேன் நடத்த அநுமதி கேட்டதற்கு, "ஸ்ரீ சிவகாமஸுந்தரி அம்பாள் சந்நிதியிலேயேதான் செய்ய வேண்டும், அப்போது தான் உலக

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



க்ஷேமம்'' என்று ஆசி அருளினார்கள் அப்படியே ஸ்ரீ க்ருஷ்ண யஜுர்வேத தைத்ரிய ஸம்ஹிதை பாகம் மட்டும் முடித்து வந்து விண்ணப்பித்த அடியேனிடம், "முடியும் போது முடியட்டும்'' என்று குறிப்பாக மட்டும் கூறி தைத்ரீய சாகை என்கிற பாகத்தையும் பாராயணம் செய்ய ஆக்ஞாபித்தார்கள், அந்த நவராத்திரி வெள்ளிக்கிழமை (புரட்டாசி மீ 12-ம் தேதி) பெரியதொரு புண்ணிய காலமாக வலிந்து உரைத்து அடியேனை இருவேளையும் தமது இல்லத்தில தம்முடனே இருக்கச் செய்து உணவு கொண்டு நிரமபவும் குதூகலமாகக் கொண்டாடிய நாள், புரட்டாசி 15 (1 — 10 — 84) திங்கட்கிழமை இரவு அடியேனையம்இருத்தி எல்லோரும் சேர்ந்து உணவருந்திய கடைசி நாள். சாப்பாட்டின் முடிவில் வழக்கத்துக்கு மாருக பாதை தெரிய வெளிச்சம் காட்டச் சொன்னது. மறுநாள் செவ்வாய்க்கிழமை காலே பார்வை புரியவில்லே என்ருர்கள், 18-ம் தேதி வியாழக்கிழமை மாலே 3-மணி முதல 6-30 மணி வரை 4 தடவை அனுஷ்டான ஜபங்களே அனுஷ்டித்த விந்தை. 17. 18, 19 தேதிகளில் ப்ரபல டாக்டர்கள் வந்து பார்க்க இயலாத சூழ்நிலே. 20-ம் தேதி (6—10 84) சிறந்த டாக்டர் முத்துக்குமரன் வந்து பார்த்து பயமில்லே எனச் சொன்னது. 7—10—84 ஞாயிறு இரவு வரை பால் முதலிய தரவ பதார்த்தம தவிர எந்தவித ஆகாரமும மருந்தும் உட்கொள்ள விருப்பமல் மறுத்து விட்டார்கள் 22-ம் தேதி (8—10—84) திங்கட்கிழமை காலே முதல் ஜல பானமும் செய்யாமல் சிதம்பர பஞ்சாக்ஷர முதலிய மந்த்ரங்களே மந்தமாக ஜபித்துக்கொண்டே இருந்தார்கள். அன்று ஸ்ரீ நடராஜர் மஹா அபிஷேகம். இரவு 7-மணிக்கு அடியேன ஐயா அவர்களுக்கு மஹாபிஷேக மந்த்ராக்ஷதையும் விபூதியும் எடுத்துச் சென்று கொடுத்ததை அன்புடன் ஏற்றருளிய பிறகு இரவு 9-30 மணிக்கு மஹாபிஷேக பூஜை செய்துவிட்டு அன்றைய பூஜைகாரர் ஸ்ரீ நடராஜ தீக்ஷிதர் அவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an



கங்காஜல அபிஷேக தீர்த்தமும் விபூதியும் ஐயா அவர்களுக்கு அளித்தபின் ஐயா அவர்களுடைய ஜீவ பரமான்மா 1-மணிக்கு லயமடைந்தது. அதே ஸமயம் ஐயா அவர்களது அன்புக்குரிய சிஷ்யர் ஸ்ரீ வைத்தியநாத சிவன அவர்கள் தமது நித்ய வீதி ப்ரதக்ஷிணக்ரியையில் ஐயா அவர்களுடைய க்ருஹத்வாரத்தில் ''கைலாஸவாஸி'' என்கிற ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாமத்தைத் தமது பாராயணத்தில உரக்க ஒலித்து வந்தது பெரிய ஆச்சர்யமாக இருந்தது. நித்ய கைலாஸவாஸியாக ஐயா அவர்கள் ஆகியிருப்பதற்த இந்நிகழ்ச்சி என்றும் நினைவில் கொள்ளத் தக்கதாகும்

பூத உடலை நீத்தார்களேயன்றி, அடியேன் போன்ற ஐயா அவர்களின் பக்தர்களுக்கு எப்போதும் உடனிருந்து ஆசி வழங்கிக்கொண்டு என்றும் நிலைத்திருக்கின்றார்கள் நமது ஐயா அவர்கள்.

சிதம்பர புரே ஸ்ரீமத், த்ரி ஸஹஸ்ர த்விஜாவளௌ l
வத்ஸரே சுபக்ருத் தௌலௌ மாஸே சாத்யர்க்ஷகே சுபே ll
சுலக்னே மகரே சாத, கானே நாம கதே கலௌ l
ஆவிர் பூபாத ஸம்ராஜ. தபர; சித் ஸபாபதி: ll
மீனாக்ஷி சுந்தர சிவ காமேச்வர்யோ: ப்ரியஸ்ஸுத: l
ஸதா த்யேயோ கணேசாக்யோ, ராஜ பூர்வோ மஹாமுனி: ll
ஸ்ரீ ஸ்ரீ வித்யாநந்த நாதோ, தஹரோபாஸக: ச ய: l
ஸமாராத்ய சிரம் காலம் சிதம்பர ஸபாபதிம் ll
ஸம்ஸித்தானேக மந்த்ர; சா சீதி த்வய வயா: ச ஸ: l
ரக்தாக்ஷ்யாக்ய சுபே வர்ஷே மத நாசே கலௌ கதே ll
ஸித கன்யா சதுர்தஸ்யாம் ஸித்த யுக் யோக மத்யமே l
ஸ்வீக்ருத்ய நடராஜஸ்ய ப்ரஸாதம் பூதி பூஷித: ll
தத்ராத்ரௌ கடிகை கஸ்மின் குஞ்சிதாங்கிரி பதம் கத: l

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata and



பேர குரோ தவ பாத பத்ம யுகளே, பக்திம் விநா கிம் குர்ம :?
ச்ராவம் ச்ராவ மநுஸ்மரந் தவ குணும், போதிம விநா ச்ருணும:
காப்பீர்யம் தவ ருப முன்னத தமம்., யாதா த்வத் வாக் வைபவம்,,
ஸ்மாரம் ஸ்மாரம தவைவ கர்ம ஸரணிம், கிஞ்சாப்யஸாத்யம் ஹி ந: ||

சிதம்பரத்தில் செல்வ த்ரிஸஹஸ்ர முனிஸ்வராள் என வழங்கும் தில்லைவாழ் அந்தணர் குலத்தில் சுபக்ருத்வருஷம் ஐப்பசி மாதம அச்வினி நக்ஷத்திரத்தில் மகர லக்னத்தில் (கத கலி 5003) சித்ஸபாபதியின் மறு அவதாரமாக உண்டானவர்களும், ஸ்ரீ மீனுக்ஷிஸுந்தர தீக்ஷிதர் ஸ்ரீ சிவ காமி அம்பாள் இவர்களுடைய அபுபுத்தரயரும், எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டியவர்களும், ஸ்ரீ ராஜ கணேச தீக்ஷிதர் எனப் பெயர் கொண்ட மஹாமுனிவர்களும், ஸ்ரீ ஸ்ரீ வித்யாநந்த நாதர் என தீக்ஷா நாமம் பெற்று சிதம்பரம் தஹர வித்தியோபாஸகர்களும், வெகு காலம் ஸ்ரீ சிதம்பரம் சபாநாயகரைப் பூஜித்து அநேக மந்த்ர ஸித்திகளை அடைந்தவர்களும், தமது 82-வது வயதில் ரக்தாக்ஷி வருஷம் (கத கலி 5088) புரட்டாசி மாதம் சுக்ல சதுர்த்தசி ஸித்த யோக அர்த்த ராத்திரியில் ஸ்ரீ நடராஜ ப்ரசாதததைப் பெற்று, விபூதி அணிந்தவர்களாக சிதம்பர நடராஜ குஞ்சித சரணர விந்தத்தை அடைந்தவர்கள்.

இனியும்,

"ஹே குருநாதரே தங்களது திருவடிக்கமலங்களில் பக்தி செய்வதைத் தவிர யாது செய்வோம்? தங்களது குணக்கடலை கேட்டுக் கேட்டு சிந்தித்து அவற்றை தவிர என்ன கேட்கப் போகிறோம்? உங்களது உயர்ந்த ரூபமும் அதற்குத் தகுந்த கமபீரமான உமது வாக் வைபவததையும் நினைத்து நினைத்து தங்களது வழியிலேயே செல்லும் எங்களுக்கு சாதிக்க இயலாததுதான் எது.?"

85, தெற்குரதவீதி,
சிதம்பரம
20—12—91.

. ஸதா ஸ்ரீ குருநாத ஸ்மரமணையில்
G. பரமேஸ்வர தீக்ஷிதர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உ

ஸ்ரீ சிவமயம்

# ஸ்ரீ சிதம்பரேச்வர அஷ்டோத்திர சதநாமாவளி :

| | | |
|---|---|---|
| ஓம் | சிதம்பரேச்வராய நம : | சிதம்பர க்ஷேத்திரத்தில் விளங்கும் கடவுள். |
| ,, | சம்பவே நம : | மங்களம், செல்வம் இவற்றை அருளுபவன். |
| ,, | நடேசாய நம : | நடபதி. |
| ,, | நடன ப்ரியாய நம : | நடனத்தில் ஆசை கொண்டவன். |
| ,, | அபஸ்மார ஹராய' நம: | அபஸ்மாரன் என்னும் (முயலகனே, அவித்யையை) நோயை அழிப்பவன். |
| ,, | ஹம்ஸாய நம : | பரமாத்ம சொரூபீ. |
| ,, | ந்ருத்த ராஜாய நம : | நடன அரசன். |
| ,, | ஸபா பதயே நம : | ஸபைக்கு நாதன். |
| ,, | புண்டரீக புராதீசாய நம : | புண்டரீகபுரம் என்னும் சிதம்பர தலத்துக்குத் தலைவன். |
| ,, | ஸ்ரீ மத் ஹேம ஸபேச்வராய : | மங்களமான பொற்சபைக்கு ஈசன். |
| ,, | சிவாய நம : | மங்களமுள்ளவன். |
| ,, | சிதம்பர மனவே நம : | சிதம்பரமந்திர சொரூபீ சிதம்பரம் என்ற சொல்லையே மந்திரமாகக் கொண்டவன். |
| ,, | மந்த்ர மூர்த்தயே நம : | மந்திரமே உருக்கொண்டவன். |
| ,, | ஹரி ப்ரியாய நம : | மாலிடம் அன்புள்ளவன். |
| ,, | த்வாதசாந்த ஸ்திதாய நம : | சிரஸின்மேல் 12 அங்குலத்தில் உள்ள தலத்தில் வசிப்பவன். |
| ,, | ந்ருத்தாய நம : | ஆடுபவன். |

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata and



| | |
|---|---|
| ஓம் ந்ருத்த மூர்த்தயே நம : | ஆடலங்கங்களை உடையவன். |
| ,, பராத் பராய நம : | எல்லாவற்றுக்கும் மேலான பரம் பொருள். |
| ,, பரானந்தாய நம : | எல்லா ஆனந்தத்துக்கும் மேலானவன். |
| ,, பரம் ஜ்யோதிஷே நம : | சிறந்த சோதியன், சோதி வானவன். |
| ,, ஆனந்தாய நம : | ஆனந்தவடிவன். |
| ,, விபுதேச்வராய நம : | பிருஹஸ்பதி முதலான தேவர்களுக்கு ஈசுவரன். |
| ,, பர ப்ரகாசாய நம : | பரம்பொருளை விளக்குபவன். |
| ,, ந்ருத்தாங்காய நம : | நடமாடும் அங்கங்களை உடையவன். |
| ,, ந்ருத்த பாதாய நம : | நடமிடும் திருவடியன். |
| ,, த்ரி லோசனாய நம : | முக்கண்ணன். |
| ,, வ்யாக்ர பாத ப்ரியாய நம : | வியாக்ரபாத மகரிஷியிடத்தில் அன்புள்ளவன். |
| ,, மந்தர ராஜாய நம : | மந்த்ரங்களின் அரசன். |
| ,, தில்வ வனேச்வராய நம : | தில்லைவன ஈசன். |
| ,, ஹராய நம : | அரன். |
| ,, ரத்ந ஸபா நாதாய நம : | இரத்தின சபைக்கு நாயகன் (திருவலங்காட்டீசன்). |
| ,, பதஞ்ஜலி வர ப்ரதாய நம : | பதஞ்ஜலிமுனிக்கு வரமருள் பவன்: |
| ,, மந்த்ர விக்ரஹாய நம : | மந்தரமே வடிவானவன். |
| ,, ஓம் காராய நம : | பிரணவ வடிவன். |
| ,, சங்கராய நம : | நல்லதே செய்பவன். |
| ,, சந்த்ர சேகராய நம : | சந்திரனைத்திருமுடியிலணிந்தவன். |
| ,, நீல கண்டாய நம : | விஷத்தைக்கழுத்தில் தரித்தவன். |

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



| | |
|---|---|
| ஓம் லலாடாக்ஷாய நம: | நெற்றிக்கண்ணன். |
| ,, வந்ஹி ஹஸ்தாய நம: | அனலேக்கையில் பூண்டவன். |
| ,, மஹேச்வராய நம: | மஹேச்வரன் (உத்ஸவமூர்த்தி) |
| ,, ஆனந்த தாண்டவாய நம: | ஆனந்தநடமிடுபவன். |
| ,, ச்வேதாய நம: | வெண்ணிறத்தன். |
| ,, கங்கா தராய நம: | கங்கையைத்தரித்தவன். |
| ,, ஜடா தராய நம: | சடையைத்தரித்தவன். |
| ,, சக்ரேசாய நம: | சக்ரத்துக்கு ஈசன். |
| ,, குஞ்சித பதாய நம: | தூக்கி வளேத்த திருவடி உடையவன். |
| ,, ஸ்ரீ சக்ராங்காய நம: | ஸ்ரீ சக்ரத்தை அங்கமாக உடையவன். |
| ,, அபய ப்ரதாய நம: | அபயமருளுபவன். |
| ,, மணி நூபுர பாதாப்ஜாய நம: | உயர்ந்த மணிகளால் சப்திக்கிற திருவடிச் சிலம்புகள் விளங்குகிற தாமரைத்திருவடியான். |
| ,, த்ரி புரா வல்லபேச்வராய நம: | முப்புர நாயகிக்குக்கணவன் |
| ,, வீஜ ஹஸ்தாய நம: | வீசிய கரமுள்ளவன். 50 |
| ,, சக்ர நாதாய நம: | சக்கரத்துக்குத் தலேவன். |
| ,, பிந்து த்ரைகோண வாஸகாய நம: | பிந்துவுடன் கூடிய த்ரிகோணத்தில் வசிப்பவன். |
| ,, பாஞ்ச பௌதிக தேஹாங்காய: | பஞ்சபூதங்களேயும் விளக்கும் படி அவற்றைத் தமது தேஹாங்மாக உடையவன். |
| ,, பரமானந்த தாண்டவாய நம: | பரமானந்த தாண்டவம் புரிபவன். |
| ,, புஜங்க பூஷணாய நம: | பாம்பணி பூண்டவன். |

Center for Shaiva Studies, Pondicherry Collection

